ஆக்கம்: ஆசிரியை N. பத்மலோஷனி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

## சோல்பரி அரசியல் யாப்பும் சுதந்திரம் பெறலும்
## (பக்கம் 90 – 93)

1948 ஆம் ஆண்டில் இலங்கைக்கு சதந்திரம் கிடைக்கப் பெற்றமை இந்நாட்டு வரலாற்றில் முக்கியமான ஒரு திருப்பு முனையாகும். அத்தோடு பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையொன்று இந்நாட்டுக்கு கிடைக்கப்பெற்றமையால் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மூலம் அரசியல் செயற்பாடுகளில் தொடர்புபடும் சந்தர்ப்பம் பொதுமக்களுக்கு கிடைக்கப்பெற்றது. 1972, 1978 ஆம் ஆண்டுகளில் புதிய அரசியல் யாப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அரசியலில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

1. சோல்பரி ஆணைக்குழு இலங்கைக்கு வந்த ஆண்டு
   I. 1945 II. 1947 III. 1944 IV. 1946
2. இலங்கையில் முதன்முதலாக பாராளுமன்றம் திறந்து வைக்கப்பட்ட ஆண்டு.
   I. 1948 பெப்ரவரி 10 ஆம் திகதி II. 1948 பெப்ரவரி 04 ஆம் திகதி
   III. 1948 மே 22 ஆம் திகதி IV. 1948 மார்ச் 10 ஆம் திகதி
3. 1948 ஆம் ஆண்டு (சுதந்திரத்துக்குப் பின்) இலங்கையின் முதலாவது பிரதமர்
   I. S.W.R.D. பண்டாரநாயக்கா II. டட்லிசேனாநாயக்கா
   III. D.S. சேனாநாயக்கா IV. சிறிமாவோ பண்டாரநாயக்கா
4. செனட் சபை முறையை முதன்முதலில் இலங்கைக்கு அறிமுகம் செய்த அரசியல் யாப்பு
   I. கோல்புறூக் அரசியல் யாப்பு II. டொனமூர் அரசியல் யாப்பு
   III. சோல்பரி அரசியல் யாப்பு IV. மனிங் அரசியல் யாப்பு
5. பின்வரும் சோல்பரி யாப்பின் முக்கிய அம்சங்களைக் கொண்ட விடை
   A. இரு சபைப் பாராளுமன்றம் B. அரசுக் கழகம்
   C. ஆளுனர் நாயகம் D. பிரதமர் தலைமையிலான அமைச்சரவை
   I. ABC II. BDE III. ABD IV. CDE

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1. பிரித்தானிய அரசு இலங்கையுடன் கொண்டிருந்த தொடர்பை கைவிட விரும்பாமைக்கான காரணம் யாது?
2. 1947 ஆம் ஆண்டு செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு அமைவாக பிரதமர் இணக்கம் தெரிவித்த விடயம் யாது?
3. சோல்பரி யாப்பின்படி ஆளுநர் நாயகத்தின் வகிபங்கு மூன்றினைக் குறிப்பிடுக.
4. A. சோல்பரி யாப்பின்படி சட்டத்துறையின் இரு பிரிவுகளின் பெயர்களை குறிப்பிடுக.
   B. அச்சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை முறையே குறிப்பிடுக.
5. சோல்பரி யாப்பின்படி பிரதமரின் பொறுப்புக்களை குறிப்பிடுக.

6. 

I. படத்தில் உள்ளவர் யார்?

II. அரசுக்கழகத்தில் இவர் வகித்த பதவி யாது?

III. இவர் அமைத்த கட்சி எது?

IV. 1948 ல் இவர் வகித்த பதவி என்ன?